# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உ௰௩ | மலர் |
|---|---|---|
| ச௬ | பரிதாபி, ஆடி<br>( 1972 — ஜூலை — ஆகஸ்ட் ) | ௪ |


## வாழ்விக்கும் காவியம்


திரு K சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.


தவத் தமிழின் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை, சீத்தலைச் சாத்தனாரென்ற அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் பெருமானால் இயற்றப்பட்டுள்ள ஓர் வாழ்விக்கவல்ல இனியதோர் இயற்றமிழ்க் காவியமாகும். இக்காவியம் மணிமேகலையின் கதையினைப் பொருளாகக் கொண்டு பல்வேறு சமயத்துப் தத்துவவாதிகளின் தத்துவங்களைப் பற்றிக் கூறி நிரந்தரமாய வாழ்வினமைதியில் மக்களைச் சேர்க்கும் கருத்து மாண்புடையது காவியத்து நுட்பத்தினை ஆயின், அஃது சமுதாய அறத்தொண்டினைத் தமிழ்ப் பண்புடன் வளர்க்கும் அமுத காப்பியம். பௌத்த சமயக் கருத்துக்களையும் கொள்கைகளையும் அந்தமில் இன்பொடு ஆர்தரப்புரியும் இக்காப்பியம், பொருட்பெண்டிர் குலத்தில் பிறப்பினும், சேற்றில் தோன்றிய செந்தாமரை மலர் போன்று துறவு ஒழுக்கத்தால் விழுப்பமுற்ற பேரறச் செல்வியை நாயகியாகக் கொண்டுள்ளது. பற்றற்ற ஒழுக்கத்தாலுயர்ந்த மணிமேகலையின் துறவு வரலாற்றை இக்காவியம் சுவை நலம் கனிந்தொழுகக் கூறுவதில் உளதாகிய அருமை பெருமையினை உளங்கொண்ட அம்பிகாபதி 'மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே' என்றும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் வெங்கைக் கோவைச் செய்யுட் பகுதியின் கண் 'கொந்தார்குழல் மணிமேகலை நூல் நுட்பம் கொள்வதெங்ஙன்' எனவும் செவ்விதின் ஆய்ந்து மகிழ்ந்து செப்பியது நுத்துணரற்பாலது.

மணிமேகலைக் காப்பியம் தேனருவியன்ன ஆசிரியப்பாவா லியன்றது ; வரலாற்றுச் சுருக்கமாகிய பதிகத்தையுடையதாய் 'விழாவறைகாதை' முதலாக 'பவத்திறமறு கெனப்பாவை நோற்றகாதை' யீருக முப்பது காதைகளைக் கொண்டு, தொல காப்பியச் செய்யுளியலில் கூறப்படும் 'இயைபு' என்ற வனப்பு பெற்று இலங்குவது. இக்காதைகள் யாவும் கதை பொதி பாட்டுக்களாகவே திகழ்ந்து, அமிழ்தினுமினிய தமிழ்த் தெய் வத்தின் மேகலையினை புனைந்து அழகு படுத்தும் முப்பது கோவைகளாக அமைந்துள்ளன. இக்காதைகள் இலக்கிய இன்பம் அளித்து பெரு வாழ்வுக்குரிய பரந்த அறிவினையும் விரிந்த நோக்கினையும் நல்கும் பான்மையன.

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் கேட்ப, பல்கலை களிலும் வல்ல தண்டமிழாசானாகிய சாத்தனார் இக்காவியத்தை யாத்தாரென்பது

இளங்கோவேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்
மாவண்டமிழ்த்திற மணிமேகலை துற
வாறைம் பாட்டினுள் அறிய வைத்தனனென் '

என்ற நூற்பதிக இறுதி அடிகளால் தெளியப்படும். சிலப்பதி காரத்துக் காவியத் தலைவனது காதலியாம் மாதவியின் மகள் மணிமேகலையின் துறவு ஒழுக்கத்து வரலாற்றினைக் இக்காவியம் பாரித் துரைத்தலின், 'மணிமேகலை துறவு' எனவும் இஃது அழைக்கப்பெறும். இளங்கோவும் சாத்தனாரும் வெவ்வேறு சமயச் சார்புடையராயினும், வரலாற்றுக் கதையில் ஒத்த கருத் துடையராதலால் சாத்தனாரது மணிமேகலைக் காவியம், சிலப் பதிகாரத்தின் தொடர்ச்சியென உளங்கொளல் வேண்டும். இளங்கோவடிகள் சாத்தனாரது அணிதீந் தமிழினை வியந்து 'நன்னூற் புலவன் தண்டமிழாசான் சாத்தான்' எனப் போற் றியதால், நன்னடையுடைய இவரது நூலின்கண் இலக்கண வழா அமை தேற்றமென்பது கடைப்பிடித்துணரற்பாற்று மற்றும் வாழ்விக்கும் காவியம் காலத்தை வென்று வாழும் காவியமாதலால், இதனில் வழூஉச் சொற் புணர்த்தல், வெற் றெனத் தொடுத்து மயங்க வைத்தல், சென்று தேய்ந்திறுதல் முதலாய குற்றங்கள் காணலியலாது என்று இதனைக் கற்ற றிந்தோர் புகலா நிற்பர். மணிமேகலையின் கதை சாத்தனார் காலத்தே நிகழ்ந்ததாதலின். இந் நூலின்கண் பெரும்பாலும்

உள்ளது கூறுதலே காணுவதாக மனதிற்குத் தோன்றும் வண்ணம், சாத்தனர் புலப்படுத்தி நாட்டிற்கும், மொழிக்கும், வாழ்வுக்கும் ஏற்றமளித்தார்.

கோவலன் கொலையுண்ட செய்தியினை, மணிமேகலையின் அன்னை மாதவி கேட்ட பின்னர், அறவண அடிகள் அடிமிசை வணங்கி அவர்பால், பிறந்தோர் உறுவதாகிய பெருந் துன் பத்திற்கு காரணம் பற்றென்றும், பிறவார் உறுவதாகிய பெரும் பேரின்பத்திற்குரியது பற்றறு தாலென்றும், காமம் கொலை, கள், பொய், களவு ஆகியவற்றைத் துறத்தலெனும் சீலங்கள் வாழுமுயிர்க்குச் சாலவும் வேண்டற்பால தென்பதையும் உணர்ந்து துறவு கோலம் பூண்டனள். மற்றும் மணிமேகலை தன் மகள் அல்லள் என்றும், அவள் மதுரைப் பேரூர் கனை யெரி மூட்டிய மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகளென் றும், அதனுன் அவள் தவவழியல்லாது பரத்தமை அவவழிக்கு பொருந்தாளாதலால், தன் மகள்

'மணிமே கலையை வான்துய ருறுக்கும்
கணிகையர் கோலங் காணு தொழி கெனக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்'

செய்தாள். பேரழகியாய மணிமேகலையும், மாதவி வழி, அற வணவடிகள் அறவுரையாவும் தன் மனதில் நன்கு பதிந்ததால், சித்தம் யழகியராகவும், உள்ளத்தை உயர் நெறியினிலுய்த்தும் திண்மையும், துறவு ஒழுக்கத்துப் பீடுடைய குறிக்கோளையு முடைய வாழ்வும் கொண்டவளாய்த் திகழ்ந்தாள். தனக்கென வாழாப் பிறர்க்குரியராய் அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும் இயல்பும் பெற்று மணிமேகலை தன் இயற்கை அறிவோடு கூடிய தவக் கல்வி கேள்வியின் அறிவு உணர்வால் காதலுணர்வு உள்ளத்தை அடக்கி ஒடுக்கினுள்.

காவியத் தலைவியாகிய மணிமேகலை அக அடக்கத்தின் மேன்மையும் திண்மையும், தவப்பெருந் திருவினராான சாத்தனர் அவளது புற எழில் அற மாண்பினில் ஆற்றலுடன் விளங்கு மாறு செய்து அவளது உயிரோவியத்தை சிறப்பீனுஞ் செம் பொருளாக நம் அகக் கண்ணுற் காணுமாறு வைத்து

'மடந்தை மெல்லியல்
தளரிடையறியுந் தன்மையள் கொல்லோ
விளையா மழலை விளைந்து மெல்லியல்
முளையெயி ரரும்பி முத்துநிறைத் தனகொல்
செங்கயல் நெடுங்கண் செவிமருங் கோடி
வெங்கணை நெடுவேள் வியப்புரைக்குங் கொல்'

என செய்யுளெழில் நலத்தோடு களிப்பிலாழ்த்துவர். மற்றும் இவ்வுண்மையினை

'மணிமே கலைதன் மதிமுகம் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய
கடைமணி உகுநீர் கண்டனனயின்
படையிட்டு நடுங்கும் காமன் ! பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ ?

எனும் அடிகள் தெள்ளத் தெளிய விளக்கிக் கூறியது பெரிதுங் குறிக்கொளற்பாற்று. இதனுன் மணிமேகலை காமனைக் கடந்த வாய்மையள் என்பதும், ஊழ்தரும் விழுமிய தவத்தள் என்பதும், ஒரோவழி விளக்கமாமென்க. மேலும் சாத்தனுர் மணிமேகலையை 'உயிர் முதல்வி' யெனக் கொண்டு

'காணுர் கேளார் கால் முடமானேர்
பேணு மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்ருேர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பன்னூருயிரம் விலங்கின் தொகுதியும்
மன்னுயிரடங்கலும் வந்தொருங் கீண்டி

பசிப்பிணி தீர்த்த பாவை'

எனப் போற்றி மகிழ்ந் திசைப் பாராயினர். மற்றும் அரும்பசி யறுக்கும் பேரறத்தினைக் கைகொண்ட மணிமேகலை வேற்றுரு வெய்தி அந்தரத்தில் இரிதற்குரிய மந்தரமும் தந்திரமும் ஒருங்கே போதிக்கக் கற்றவளென வியந்து உய்த்துணர வைத்தார்.

வாழ்விக்கும் காவியத்தில் சாத்தனுர் மணிமேகலையின் வரலாற்றை உள்ளது உள்ளபடி கூறினும் கற்பவர் உள்ளத்தே உணர்வினையெழுப்பி, மனம் இன்புறும் வகையில் கற்பனையினைக கலந்துரைக்கும் செவ்வியினை மேற்கொண்டு, காவியத்திற்குச்

சுவையூட்டுவாராயினர். இங்ஙனம் கவிஞர் கற்பனை கொண்டு படைத்தவையாவும் ஒரு வகையில் நடந்தனவாகவே இயலாற்றல் கொள்ளவும் பேரியக்கங் காணவும் விளங்கும். இக்காவியம் பழந் தமிழ்ச் சமய மரபின் செழுங் களஞ்சியமாய் சமயவியற் தொடர்புடைய செய்திகளைத் தெளிவிப்பதினுன், ஒன்பான் சுவைகளை இதன்கண் ஒருங்கு காணலியலாது. அதனுன் சாத்தனுர் இயற்கைக்கு இகந்த செய்திகளை இறும்பூதும் வண்ணம் நம்பிக்கைக்கு உகந்த வகையில் அதாவது மணிமேகலையை அடைய உதயகுமரன் உறுதிகொண்ட காலத்து மணிமேகலா தெய்வம் தோன்றி மணிபல்லவத்திற்கு வான வழியே பேரறிவு புகட்ட எடுத்துச் சென்றதும், புத்த பீடிகையால் மணிமேகலை பழம்பிறப்புணர்ந்து மெய்யுணர்வு பெற்றதும், உயிரியல்புகளைப் பாழாக்கும் பசிப்பிணியினைப் போக்க உயிர் மருந்தினை நல்கும் அமுத சுரபியெனும் அறவோட்டினை மனமகிழ்வுற அவளது செங்கையில் தோற்றுவித்ததும், அவள் இடையூறின்றி வஞ்சிமாநகர், சாவகம் முதலிய இடங்களுக்கு எளிதில் விண்வழியில் இயங்கவும், மற்றும் அவள் இளம் பருவத்து அழகுடையவளாதல் பற்றி ஆடவர் கண்டால், காணுது அகன்றேகவும், சமயக் கணக்கர்கள் சமய உண்மைகளை இளம் பெண்களுக்குரைத்து உணர்த்தாரென்பது கருதி வேற்றுரு கொள்ளவும், மணிமேகலா தெய்வம், அவருக்கு பிறப்பறுத்திடுதற்குரிய வழியில் மந்திரம் போதித்ததுவுமாகிய இன்னோரன்ன வியப்பினை விளைக்கும் பிறவற்றையும் சாற்றியுள்ளார் இங்ஙனம் தங்கொள்கை நிறுவி, முறைமையோடு சாத்தனுர் சாற்றியவையாவும், செவியாருகச் சிந்தைக்களாருகச் சென்று கற்பனைச் செறிவில் தெய்வவுண்மையினை உணர்த்தும் சீர்மைத்து: அல்லாமலும், அறிவு தோயும் இடங்கள் தோறும் தெய்வ இனிமையை விளைவிக்கும் காவியச் சுவையைத் தெவிட்டாத தெள்ளமுதமாய் வயங்க வைக்கும் பான்மைத்து.

வாழ்விக்கும் இக்காவியம், வாழ்வின் துன்பங்களை விளக்கி அவைகளைக் கடக்கும் வழியையும், மெய்யறிவையும், அவ்வறிவில் நிலைத்திருக்கும் வீடு பயக்கும் உணர்வின்பத்தையும் தெளிவாய்ப் பயன்கொள்ளுமாறு எடுத்துக் கிளக்கிறது. வாழும் முறையில் உண்மை, மெய்ம்மையொழுக்கம், வாய்மை, தூய்மை ஆகியவற்றை, மிக நுட்பம் செறிந்து திகழவும் மெய்ப் பொருட்குரியார் கொள்ளவும் வற்புறுத்துகிறது. செவ்விய பேரருள் விளம்பும் திறங்கொண்டு, தன் கண்படிந்தாரை, பொய், களவு, காமம், சினம் முதலியவற்றைக் காய்ந்து கடியச் செய்து அறத்

தின் தத்துவ நெறியிற் செலுத்துகிறது. ஐம்பொறி அறிவு களைப் புலனெனவும், மனத்தின் மெய்ம்மையாய உணர்வை அறி வெனவும் கொண்டு. தன்னெறியில் நின்று தூயதாக உள்ள மனம், பொறிகளோடிணைந்து புலனறிவாக மாறுங்காலை மனத் தின் கண் 'பலவகை மாசுகள் தோன்றுதலான். அந்தகைய மாசுகளை நீக்கும் நெறிதான் 'அறம்' என வலியுறுத்தி, ஒல் லும் வாயெல்லாம் அறவினையியற்ற அறிவுறுத்துகிறது. பசிப் பிணியினை நீக்குதலாகிய பேரறத்தின் மெருமையினையும், சிறையிடத்தை அறக்கோட்டமாக மாற்றும் சீரினையும், மது விலக்குபற்றி கட்குடியனது இயல்பைக்கொண்டு பாரித்துரைத் தலையும், குலம் தாங்கும் பொய்மைச் சாதிகளின் வேற்றுமை யினை ஒழித்தலையும், பசு இனத்தைப் பாங்குறக் காக்கும் பண் பினையும், என்றது போன்ற வாழ்வியலில் சமுதாய நியதி அல்லது கட்டுப்பாடு கொண்டுள்ள பல் நல்லாற்றுப் படூஉம் நெறிகளையும், மணிமேகலைக் காவியம் வகுத்துக் காட்டியுள்ள தென்பது. அதனியல்பு உணர்ந்தோர் அறிந்துகொள்வார்.

சமயச் சார்பில் எழுந்த இக்காப்பியம் பௌத்த சமயத்திற்கு அழியாத புகழையும் பெருமையும் அளிக்கிறதாயினும், காவியத் தினை உணர்ந்து கற்பதின் மூலம் அச்சமயமே காவியத்திற் காக செந்தமிழ்ப் பொருட்டொடர் நிலைச் செப்புளில் உருவா கியதோ யென்பது உணரப்படும். இக்காவியத்தில் சாத்தனார் சமயங்களின் புனிதமாய அழகினையும் பெற்றியையும் அறிந்து கொள்ளுமாறு விளங்க வைத்து, அவை உயிர்களும் இறைத் தன்மையோடு இரண்டறக் கலந்து இன்பமுறுதலுக்குரிய அரிய கருவிகள் எனக் கொண்டார். மற்றும் வாழ்வும் சமயமும் இணைந்து பிணைந்தால் உயிரும் இன்பமும் நெடிது நிலைத்து நிற்கும் வாய்ப்பினை, அறவணவடிகள் எனும் பாத்திரப் படைப்பின் வழி ஆசிரியர் எடுத்துக் காட்டி. உண்மையாய சமய ஞானத்தை, காவியக் கவிதை மூலம் பெறவியலுமென்பதை உணர்த்தியுள்ளார். அறிவும் அன்பும் அமைதியும் நிலவும் ஆழ்ந்த சமயப் பண்பாட்டினை பௌத்த சமயத்தில் கண்டு ணர்ந்த சாத்தனார், அம்மதக் கோட்பாடுகளைக் காவியத்தில் பரப்பும் நோக்கத்தையே குறிக் கோளாகக் கொண்டுள்ளா ரென்பது அக்காவியத்தின் உட்கோளாக அமைந்த 'சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை' யானே நனி விளங்கும். இக் காதையின் கண், பிருகற்பதி இயற்றிய உலோகாயதம், புத்தன் வகுத்த பௌத்தம், கபிலன் கண்ட சாங்கியம், அக்க பாதன் ஆக்கிய நையாயிகம், கணாதன் செய்தவை சேடிகம்.

சைமினி அருளிய மீமாஞ்சம் என அறுவகைச் சமயங்களும் வியன் பெரும் தத்துவங்கள் கொண்டு இயங்கினதை இனி தொடுத்துக் கூறப்பட்டுள்ளன. காவிய நாயகியாய மணிமேகலை. வைதீக நெறியின் அளவைவாதி சைவவாதி. பிரமவாதி. வைணவ வாதி. வேத வாதி. நிகண்ட வாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகிய பலரையுமடைந்து அன்னவர்களது சமயக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் கேட்டுணர்ந்து அவற்றுளொன்றும் அவளுக்கு உண்மையும் தெளிவும் சிறிதும் தோன்றாது கழிய, பின் பௌத்தமே செம்மை நெறியோடு கூடிய மெய்ம்மையெனத் துணிந்தாள். பௌத்த சமயக் கருத்துக்கள் மணிமேகலையினுள்ளத்தைக் கொள்ளை கொண்டதினுன் அவள் பௌத்த சமய நெறி நின்று ஏனைய சமயத்தார் கொண்டுள்ள முரணும் அரணும் பற்றிய கருத்துக்களைப் புலப்படுத்தலல்லாது அன்னவர் தம் கோட்பாடுகளை நிராகரணம் செய்தாளில்லை. இச்சமயம் சிறப்பாடுடைய தன்றெனு அறியார் கொள்வர்: அங்ஙனம் கொள்ளார் அறிவுடையோர்.

புத்தபிரானுல் நிலை நிறுத்தப் பெற்ற பௌத்த சமயத்து அருளறத்தினையும், அது நல்வாழ்வுக் குகந்த பான்மையில் அமைந்துள்ளதினையும் பலவாருகப் பலவிடங்களில் சாத்தனுர் கூறி, புத்தரைப் பற்றி

'அருளு மன்பு மாருயிரோம்பு
மொருபெரும் பூட்கையுமொழியா நோன்பிற்
பகவன்'

'தனக் கெனவாழாப் பிறர்க்குரியாள
னின்பச் செவ்வி மன்பதை யெய்த
வருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையி
னறக்கதிராழி திறம்பட வுருட்டிக்
காமற் ககடந்த வாமன்'

'ஆதி முதல்வோன் அறவாழி யாள்வோன்'
'பிறவிப் பிணி மருத்துவன்'
'தெளிந்த நாதன்'
'தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயிரோம்பும்
மன்னுயிர் முதல்வன்'
'முற்ற வுணர்ந்த முதல்வன்'
'தருமத் தலைவன்'.
'அறமுதல்வன்'
'குற்ற மூன்றும் முற்ற அறுக்கும் வாமன்'

என பிறபிற சிறந்த குணங்களெல்லாம் உடையவரெனப் போற்றிப் புகழ்ந்துரைத்திருப்பதும், தேற்றித் தெளித்துப் புகன்றிருப்பதும் தெருளற்பாலது.

புத்தர் தோற்றத்திற்கு ஞாயிற்றை

'உயிர்களெல்லா முணர்வு பாழாகிப்
பொருள் வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோ
ரிளவள ஞாயிறு தோன்றிய தென்ன'

என உவமை கூறி அவரது அறத்தியல்பை

ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
மாதுயரெவ்வ மக்களை நீக்கி
விலங்குந் தம்முள் வெரூஉம் பகைநீக்கி
யுடங்குயிர் வாழ்க வென்றுள்ளங் கசிந்துகத்
தொன்று காலத்து நின்றற முரைத்த
குன்றமருங்கிற் குற்றம் கெடுக்கும்

என விளக்கியதை உள்ளுந்தொறும் அறப்பயன் திகழ்தல் ஒருதலை. மற்றும், அவர் தம் அருளறம் கேட்டோர் மெய்யுணர் வாற்றலால் விழுப்பம் மேவிப் பிறவித் துன்பம் நீங்குவரென்பது

'அந்நாட் பிறந்தவன் அருளறம் கேட்டோர்
இன்னாப் பிறவி இகந்தோர்'

என்பதால் தேற்றமாம். மாதுயரெவ்வம் நீக்கும் புத்த பீடிகையின் மிக்குப் புகழெய்திய தேவத் தன்மையினை,

'கீழ்நில மருங்கின் நாக நாடாளும்

* * * *

பெருந்தவ முனிவன் இருந்தற முரைக்கும்
பொருவறு சிறப்பின் புரையோ ரேத்துந்
தரும பீடிகை'

என விதந்தோதிச் சிறப்புத் தோன்ற நுவலப்படுவது நினைதொறும் வியப்புக்குரியதாகும்.

காரண காரிய கோவைக்கு முடிவின்மையின் மூல காரணத்தைக் காணுதல் யாவருக்கும் இயலா தென்பது புத்தமதத்துப் போதனையாகும். வாழ்வு துன்பத்திற்கு ஏதுவாயுள்ள தென்பதும்.

'பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவதறி கென்றருளி
யைவகைச் சீலத் தமைதியுங் காட்டி
யுய்வகை யிவைகொளென் றுரவோ னருளினன்'.

★ ★ ★ ★

'துன்பத் தோற்றம் பற்றே காரண
மின்பம் வீடே பற்றிலி காரணம்'

என்பதால் உலகப் பற்றை ஒழித்தல் வேண்டுமென்பது பௌத்தத்தின் கோட்பாடு. கடியப்படுவது கள்ளும், களவும், காமத்தீ விழைவும், கொலையும் உள்ளக் களவு மென்பது

முடிபொரு ளுணர்ந்தோர் முதுநீ ருலகிற்
கடியப்பட்டன வைந்துள வவற்றிற்
கள்ளும் பொய்யுங் களவுங் கொலையுந்
தள்ளா தாகுங் காமந் தம்பா
லாங்கது கடிந்தோரல்லவை கடிந்தோர்'

பௌத்தக் கொள்கை. செய்வினை வழித்தாய் உயிர் உடலினை எய்தும் என்பது

'ஐயமுண்டோ வாருயிற் போனற்
செய் வினைமருங்கிற் சென்று பிறப்பெய்துதல்'

என்பது பௌந்த மதத்தின் உடன்பாடு. சிறிதும் தீங்கு செய்யத் தகாத ஆவுமாவுங் கொண்டு செய்யும் வேள்வியால்

பயனிலை யென்றும், அதனை அறவே வெறுத்து எவ்வுயிரிடத்தும் அவளுடைமை பூண்டு அறிவுடன் வாழ்ந்தொழுகுதலை பௌத்த சமயம் வற்புறுத்துவது.

விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனோடு வந்த செற்ற மென்னை ?

என உயிர்க்கொலை வேள்விக்கு ஆவினைப் பலியிட முயலும் போது ஆபுத்திரன் தடுத்த நிகழ்ச்சி கொண்டு விளங்கா நிற்கும்.

இத்தகையவாறு தீயிற் செய்யப்படும் உயிர்க் கொலை வேள்விகள் வழி பரம்பொருளைக் காணலரிதென்றும். அங்ஙனம் உயிர்கொலை புரிவாரெல்லாம் தாஞ் செய்யும் தீவினைக்குப் பிறவிகள் தோறும் எண்ணிறந்த துன்பங்களை யடைதல் வேண்டுமென்றும், ஐவகைக் குற்றங்களுங் கொண்டு, அருளும் அறமும் அன்பும் அற்று வாழுமியல் புடையோர்க்கு அவ்விழுமிய பரம்பொருள் தோன்றாதென்றும் சாத்தனார் குறிப்பாகப் பெற வைத்தார். ஓயாதே உள்ளிருக்கும் ஞான ஒளியை புத்தர் போல், அனுபவ சிந்தையால் தம்மகத்தின் இன்பநிலை முகத்தில் மலர, உள்குவார் தாம், மற்றீண்டு வாரா நெறியினையும் தெய்விக இயல்புடைய உண்மையையும் காண்பார். அனுபூதி நிலையிலே கண்டுணர்ந்த உண்மையினை, நினையாமல் நினைந்து அதனோடு ஒன்றித்து நிற்றல் மக்களுயிர்க்கு உறுதி பயக்குமென்பதை, வாழ வழி கூறும் வித்தகராய சாத்தனார் உணரவைத்தார்.

( தொடரும் )

# பாண்டியன் பரிசில் சொல்லாட்சி

திரு. கு பூங்காவனம் க. இ.
பெங்களூர்.

பாவேந்தர் பாரதிதாசன் தமிழர்க்குப் பரிசாக விட்டுச் சென்ற நூற்களுள் ஒன்று 'பாண்டியன் பரிசு'! நூன் முழுவதும் இனிய எளிய எண்சீர் விருத்தப் பாக்களில் கதையினைக் கூறிச் செல்லும் பாவியமே பாண்டியன் பரிசாகும். பரிசிலே சிறப்பாகக் காணப்படும் பான்மைகள் பல உள. அவற்றுள்ளும், கதையினை இனிதே கூறிச் செல்லற்கும் தம் கருத்தினை நுணுக்கமாகவும் சிறப்பாகவும் உணர்த்துதற் பொருட்டும் பாவேந்தர் பல சொற்களை ஆண்டுள்ளார். அத்தகைய சிறப்புச் சொல்லாட்சிகளுட் சிலவற்றினைக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

(1) பாவேந்தர் வாய்ப்பேற்படும் போதெல்லாம் தமிழைப் புகழ்ந்து கூருது அமையார். தமிழ் என்னில் அவர் உயிர்ப் பொருளன்றோ! 'பாண்டியன் பரிசு' மூன்ரும் இயலில் கதிர் நாட்டு அரசனும் அரசியும் சதிராடு கூடத்தில் அமர்ந்து கொண்டு பேசியும் பாடியும் பாப்புனைந்தும் மகிழ்ந்திருந்தனர் என்னும் பொருளில் கீழ்க்காணும் அடி ஒன்று வருகின்றது.

"சதிராடு கூடத்தில் தவிசமர்ந்து
தமிழ்ப் பூவால் இசைப் பாக்கள் புனைந்திருந்தார்."

இவ்வடியில் 'தமிழ்ப் பூவால்' என்னும் தொடர் அமைக்கப் பெற்றிருப்பது ஓர்மத்தைக் கிளருவதாய் உள்ளது, 'தமிழ் மொழியில்' என்று கூறியிருந்தாலே போதுமானதாக இருக்க, 'தமிழ்ப் பூவால்' என்று குறிப்பிட்டது கீழ்க்காணும் கரணியங்கட்காக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

(அ) பாப்புனைதல் போலப் பூவினைக் கோத்தற்கும் புனைதல் என்று கூறுதல் உண்டு. புனைதல் என்ருல் அணிதல் அல்லது சிறக்கச் செய்தல் என்னும் பொருள்படும். மலர்களால் கோக்கப்பட்ட மாலையைப் புனையல் என்றும், பிணையல் என்றும் கூறுதல் உண்டு. மலர்களைக் கோக்கும்போது அவற்றை ஒரே சீராகவும் நிரலாகவும் அமைக்க வேண்டும். அது போலத் தமிழ்ச் சொற்

களாகிய மலர்களை இசைப் பாக்கட்கு இசை குன்றாதபடி இனிதே அமைத்தனர் என்னும் பொருளில் 'தமிழ்ப் பூவால்' என்று குறித்திருக்கலாம்.

(ஆ) மலர்கள் வாடும் தன்மைய. தமிழ்ச் சொற்களும் காலக் கழிவில் பொருண்மாறும் தன்மையவாயினும் இலக்கியத்தில் ஒரு சொல் எப்பொருளில் ஆளப்படுகின்றதோ அப்பொருளையே குறிக்கும் அவ்விலக்கியம் உள்ளவரை! எனவே தமிழ்ப் பூக்களாகிய வாடா மலர்களால் என்றும் இனிமை (யாகிய மணம்) தரும் இசைப்பாக்கள் என்னும் இல்க்கியங்களைப் படைத்திருந்தனர், என்ற இருகாரணங்களால் 'தமிழ்ப் பூவால்' என்னும் தொடர் ஆளப்பட்டிருக்கலாம்.

(2) அதே இயலில் இறுதிப் பாடலில்.

" நாற்புறத்தும்

தமிழ்மறவர் தமைஏவித் தெற்குக் கோட்டை
மணிவாயில் தனையடைந்தான் சிங்கத்தைப் போல்"

என வருகின்ற பகுதியில் 'மணிவாயில்' என்னும் தொடர் ஆளப்பட்டுள்ளது.

மணி என்னும் சொற்குள்ள சிறந்த பொருள்களையும் அவற்றின் பொருட் பொருத்தத்தையும் காண்போம்.

(அ) மணி = அழகு — அழகியது — சிறந்தது.

மணிவாயில் என்பதற்கு அழகிய வாயில், சிறந்த வாயில் எனப் பொருள் கொள்ளின் பொருத்தமேயாயினும் அவ்வளவு சிறப்புடைத்தாய் இல்லை.

(ஆ) மணி = சிறியது.

மணிவாயில் = சிறிய வாயில், இப் பொருள் பொருந்தாது. ஏனெனில் சிறிய வாயிலாக இருப்பின் யானை, உயர்த்திய கொடியுடன் நுழையத் தக்க கோட்டை வாயில் என்னும் பழம் புலவர் கூற்றுப் பொய்க் கூற்றாக அமையுமாதலின்!

(3) மணி — நீல வண்ணம்.

(எ—டு) 1) மணிவண்ணன் — திருமால்
2) மணிகண்டன் — சிவன்.

நீல வண்ணம் உடைய வாயில் எனக் கொள்ளுதலும் பொருந்தாததே!

இனி தமிழரசர்களின் ஆட்சிச் சிறப்புக்களில் ஒன்றினை நாம் நினைவு கூர்ந்து எண்ணிப்பார்த்தால் உண்மைப் பொருள் புலப்படும். தமிழரசர்கள் முறை (நீதி) பிறழாச் சிறப்பினர். யார் வேண்டுமாயினும், எப்போது வேண்டுமாயினும் வந்து தம் குறையினைக் கூறி முறையிடலாம் என்ற கருத்தில் 'ஆராய்ச்சிமணி' கட்டி ஆண்டவர்கள் என்பது யாவரும் அறிந்த செய்தியே! அரசனின் கோட்டையில் நாற்புறமும் வாயில்கள் உண்டெனினும் அரசன் சென்று வருகின்ற பெரு வாயிலில் தான் இவ்வாராய்ச்சி மணி கட்டப்பட்டிருக்கும் என்பதும் அறியத்தக்கதாகும். இவ்வுண்மையினை மனத்திற் கொண்டு 'மணி வாயில்' என்பதன் பொருளை அறிய முற்படுவோமாயின் ஆராய்ச்சிமணி கட்டப் பெற்றிருந்த வாயில் எனப் பொருள்பட்டுச் சிறத்தலை காண்க!

மணிவாயில் — இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகையாக மணியை உடைய வாயில் என்ற பொருளில் ஆளப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் அறியலாம்.

இதனை வலியுறுத்துவதாக, அப்பாடலில், அரசன் நாற்புறத்தும் படைகளை ஏவிவிட்டுத்தான் தெற்கு வாயில் (அதாவது ஆராய்ச்சிமணி கட்டப்பட்டிருந்த அரசப் பெருவாயில்) அடைந்தான் எனக் கூறப்படுதலும் காண்க

(3) இயல் 10 இல்,

கதிர் நாட்டரசி கண்ணுக் கினியாளிடம் அவள் அண்ணன் நரிக்கண்ணன் வஞ்சம் பேசுங்காலை,

"துணை இழந்து
கைத்தூண்டிற் சிறு மீனாய்க் கலங்குகின்ற
காட்சியினை நான்காண நேர்ந்ததேயோ!
என்று கூறுகின்றான்.

இவ்வடிகட்கு, கைத்தூண்டிலில் பிடிக்கப்பட்ட சிறு மீனாய்க் கலங்குகின்றாள் கண்ணுக்கினியாள் என்று பொருள் கொள்வதோடு அமையாது எண்ணிப்பார்த்தால் 'தன்னுடையை வஞ்சனையாகிய சிறுமையில் சிக்கிக் கொண்டாள் கண்ணுக்கினியாள்; இனி அவள் தப்பமுடியாது' என்று நரிக்கண்ணன்

உட்கிடக்கையை உணர்த்துவதாகவும் உள்ளது 'கைத்தூண்டில்' என்னும் தொடர்.

(4) இயல் 15 இல் நரிக்கண்ணனுக்கும் சோழ மன்னனுக்கும் நடைபெறும் உரையாடலில், தன் முன்னோரின் விருப்பத்தாலேயே தான் கதிர் நாட்டை ஆள விரும்புவதாகவும் இல்லாவிட்டால், தான் வேழ மன்னனிடம் படைத் தலைவனாக அமருவதையே பேரின்பம் எனக் கருதுவதாகவும் பொருள் கொள்ளத் தக்கவாறு

"ஐயனே நீ
எனைத் தமிழில் "படைத்தலைவா" என்றழைக்கும்
இன்பத்துக் கீடாக இந்த வையம்
தனைத்தரினும் ஒப்பேனே"

என்று தொடர்கின்றது பாடல்.

வேழ மன்னனும் கதிர்நாட்டரசனும் தமிழ் மன்னரே என்பதில் சிறிதும் ஐயமில்லை ஏனெனில் கதிர் மன்னனும் கண்ணுக்கினியாளும்

"சதிராடும் கூடத்தில் தவிசமர்ந்து
தமிழ்ப் பூவால் இசைப்பாக்கள் புனைந்திருந்தார்"

என்று முன்பே கண்டோம்.

வேழ மன்னன் தமிழ் வேந்தனே என்பதற்கு அன்னம்,

"சதுர்நாட்டிப் பகைமுடிமேல் தாளை நாட்டும்
தமிழ்நாட்டுப் பெருவேந்தே" (இயல் 31) என்று

வேழ மன்னனை நோக்கிக் கூறுவதாகவும் உள்ளது. எனவே இரு மன்னர்களும் தமிழர்களே என்பது தெளிவாகின்றது.

இவ்வாறிருக்க,

எனைத் தமிழில் "படைத் தலைவா," என ஏன் குறிக்க வேண்டும் என்ற வினா எழுகின்றது சிறிது எண்ணிப் பார்த்தால் விடையும் புலனாகின்றது.

கடைக் கழகக் (சங்கம்) காலத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டு அரசியலிலும், வாழ்வியலிலும் ஆரியக் கூறுகள் மிகவும் காப்புற்று. வடமொழிச் சொற்களும் மிகுதியாக இடம் பெறலாயின. அரசியலில்,

அரிகேசரி, இராசகேசரி. பரகேசரி என்பனவாகிய அரசப் பட்டங்களும்,

மந்திரி, அமாத்தியன் போன்ற அமைச்சர்க்குரிய பெயர் களும்,

தானை, சேனை போன்ற படைகட்குரிய பெயர்களும் பெரு வாரியாகப் பயின்று வரலாயின.

இவ்வாறு ஏற்பட்ட ஆரியக் கலப்பினையே பரந்த நோக் கென்றும், பெருமை என்றும் கருதினர் அக்காலத் தரசர்களும், மக்களும்.

இத்தகைய மொழிக்கலப்பில்லாத தமிழின் தனித்தன்மையை-தனித் தமிழைப் பாவேந்தர் மிகவும் விரும்பினர் என்பதால்,

'சேனதிபதி,' 'சேனைத்தலைவர்.' 'தானைத் தலைவா' என முழுவதும் அல்லது பகுதியும் கலப்புறல் வேண்டாவென்று "தமிழில் படைத் தலைவா" என அமைத்தார் என்று கருதலாம்,

(5) இயல் 16 இல், வீரப்பன் தன் தோழர்களிடம் தன் வரலாறு கூறும்போது தன்னுடைய மகனைப் பற்றி,

"ஒரு வேங்கை கொடி வேங்கை போல்வான்" எனக் குறிக்கின்றன்.

இங்கு 'கொடி வேங்கை' எனக் குறித்துள்ளதின் பொருள் யாதாக இருக்கக் கூடும்?

கொடிய வேங்கை என்னும் தொடரே கொடிவேங்கை என வந்தது; 'கொடிய' என்னும் பெயரெச்சம் செய்யுள் இன்பம் நோக்கிக் 'கொடி' என 'யகர' வீறு கெட்டு வந்தது எனச் சிலர் கூறுவர்.

'கொடிவேங்கை' என்னும் தொடரில் 'கொடி' என்பது கொடுமைப் பொருள் குறித்தது என்பது பொருந்தாது! என்னை? அக் கொடுமைப் பொருள் குறிக்கக் "கொடு வேங்கை" எனப் பண்புத் தொகை (கொடுமையான வேங்கை) யாகக் குறித்தாலே போதுமானது.

பாவேந்தரே பிறிதோரிடத்தில்,

"கொடுவாளால் சிறிது சிறிதாய்" (இயல் 14) என்று குறித்துள்ளாராதலின் கொடுமைப் பொருளில் 'கொடி' என் னும் சொல்லை ஆளவில்லை என்பது போதரும்.

மேலும் கொடிவேங்கை போல்வான் எனக் குறிக்கப்படும் வேலன், கதையில் சிறந்த கல்வி பெற்றவனுகவும், மிக்க மறம் உடையவனுகவுமே படைக்கப் பெற்றுள்ளானே யல்லாமல் அவனிடம் கொடுமைப் பண்பு சிறிதும் காண முடியாது.

ஆயின் கொடி வேங்கை என்பதன் உண்மைப் பொருள் யாது?

கொள் ⟶ கொடு ⟶ கோடு = உயர்ந்த மரம், மரக்கிளை
(எ—டு) 1) "கோட்டுப் பூச்சூடினும்" (குறள் : 1313)
2) "கோடுவாழ் குரங்கு குட்டியும் கூறுப"
(தொல் : பொருள் : மரபு 12)

கொடு ⟶ கொடி : (ஒ. நோ) தடுப்பு — தடிப்பு
கொடி = 1) (கொம்பைப் பற்றி) ஓங்கி வளரும் கொடி
(முல்லை போல்வன)
2) படர்ந்து பெருகும் கொடி (பூசணி போல்வன)
3) உயரப் பறக்கும் துகிற்கொடி.

இவ்வாறே,

கொடிச்சி = (உயர்ந்த) குறிஞ்சி நிலப் பெண்.
கொடிஞ்சி = தேர்மொட்டு, என நீட்சிப் பொருள் குறித்தலும் காண்க.

எனவே, மேற்குறித்த இயலுள் "கொடி வேங்கை போல்வான்" என்னும் தொடர் ஓங்கு தாங்காக வளர்ந்த வேங்கையைப் போன்றவன் என்று பொருள் படுதல் அறியற்பாலது.

வேங்வகயின் இனமாகப் பல உள்ளனவாதலாலும், ஓரடிக்கு மேல் உயர்ந்து வளராத பூனையும் வேங்கையின் இனமாதலாலும் பெருவேங்கையைக் குறித்தற்கே கொடிவேங்கை எனக் குறித்தார் பாவேந்தர் என்பதே பொருந்துவதாம். எனவே, கொடி வேங்கை — 'கொடி' என்னும் சொல்லைப் பெயர்ச் சொல்லாகக் கொண்டு இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகக் கொள்ளலே சிறப்புடைத்தும், ஆசிரியர் உட்கிடக்கையும் ஆகும் என்பதைத் துணிந்து கூறலாம்!

(6) இயல் 25 இல்,

அன்னமும் ஆத்தாவும் தங்கியிருந்த குடிசையைப் பகைவர் சூழ்ந்தனர். ஆத்தாவின் மகன் வேலன் ஆட்டு மந்தையுட் புகுந்த வேங்கை போலப் பகைவரை வீழ்த்துகின்ருன்.

'வேலன் ஊர் மீட்கச் சாகட்டும்' என்று கூறி ஆத்தா அன்னத்துடன் மாற்றுருவில் தப்புகின்றான். அப்போது ஆத்தா தன் மகன் மீது சிறிதும் இரக்கம் இன்றி யிருந்ததைக் கண்ட அன்னம்

' மண்ணெடுத்துச் சுட்ட செங் கல்லோ. அன்றி
மலைக்கல்லோ உன்னெஞ்சம் என்றாள் அன்னம்''

என்று கூறுகின்றாள்,

இங்கு 'மலைக்கல்லோ' என்னும் தொடரில் ஒரு அறிவியல் உண்மை பொதிந்து கிடப்பதை அறியலாம்,

அஃதாவது, ஞாயிற்றிலிருந்து தெறித்து விழ்ந்த ஒரு நெருப்புத் துண்டம் இந்நிலவுலகு. அந்நெருப்புத் துண்டம் குளிர்ந்து இறுகிப் பாறைகளானது. 'எறும்பூரக் கல்லும் தேயும்' என்பது போல, அப்பாறைகளிற் பெய்த மழையாலும் பிறவாறும் கல் நொறுங்கி நொய்ந்த மணலாகவும், செறிந்த மண்ணாகவும் மாறியது என்பது அறிவியற் கொண்முடிபு.

இதனையே,

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி'' என்ற புறப்பொருள்

வெண்பாமாலைப் பாட்டும் கூறுகின்றது.

இவ்வாறு உடைந்தும் நொறுங்கியும் விட்ட மண் அல்லாமல் உறுதியாக இருக்கின்ற மலைக்கல்லோ ஆத்தாவின் நெஞ்சம் என்று பொருள் கொள்ளுதற்கு 'மலைக் கல்லோ' என்னும் தொடர் துணையாக உள்ளது.

(7) இயல் 47 இல் நரிக்கண்ணன் அன்னத்தைப் பற்றிக் குறிக்கும்போது

' நல் அறப்போர்ச்

செயல் வெறுக்கும் தமிழர் உண்டோ? தெண்ணீர் தன்னை மீன் வெறுத்த துண்டோ? என்று கூறுவதாக ஒரு பகுதி. தண்மையான நீரைத் தண்ணீர் என்பது போலத் தெண்மையான நீர் தெண்ணீர் என்றாகும். தெண்மை தெளிவைக் குறித்தது.

புதிதாகப் பொழிந்த தெளிந்த நீரில் மீன்கள் மிக விரும்பி நீந்தும் அன்றோ! இதே தெண்ணீரைப் பறிதோரிடத்திலும்

"சீர் தேங்கும் வெள்ளன்னம் அசைந்திடாது
செல்லல் போல் தெண்ணீரில் சென்றதோடம்"
(இயல் 52)

என்று குறித்துள்ளார்

(8) இயல் 55-ல் அன்னமும் வேலனும் அன்புப் பேச்சுக்கள் பேசிக்கொண்டுள்ளனர். அப்பேச்சில் ஒருபகுதி

"ஒரு சற்றும் பயனில்லா உடம்பை, வாழ்வோ
உண்டில்லை என்னுமொரு மின்னே"

என்று தொடருகின்றது.

மின் ⟶ மின்னுதல் = பளிச்சிடுதல்
மின் ⟶ மின்னல் = பளிச்சென்று தோன்றி மறையும் மின்னல்.
மின் ⟶ மீன் = மின்னலைப் போல் நீரினுள்ளிருந்து புறத்தே எம்பிக் குதிக்கும் மீன்.

பொதுவாகப் புலவர் பெண்களின் இடையைக் குறிப்பதற்கு 'மின்னிடை', 'மின்னலிடை' எனக் கூறுவர். பாவேந்தரும் அதே போல.

"மின்னையும் பன்மலர்களையும் கொண்டி யாக்கை
வேண்டும் என அமைந்ததென விளங்கும் அன்னம்"
(இயல் 57) என்றும்

"மின்னைப்போல் நுண்ணிடையாள்"
(இயல் 76 என்றும்)

குறித்துள்ளார். ஆயின் மேற்குறித்த 55 ஆம் இயலில் வாழ்க்கை நிலையாமையையும், யாக்கை நிலையாமையையும் குறித்தற்கு 'மின்' என்னும் சொல்லை ஆண்டிருத்தல் அறிந்தின்புறற்பாலது.

(9) இயல் 64 இல் அன்னம், துறவியைக் கண்டு பேழை இருக்கும் இடத்தினை அறிந்துவர வேலனை அனுப்புகின்றாள். அப்போது

"தெருவினிலே நின்றிருப்பேன்! வரவுநோக்கிச்
செவிக்கமுது கொண்டு வரவேண்டும் என்றாள்"

என வருவது ஒரு பகுதி.

'அமுது', 'அமுதம்' 'அமிழ்தம்' என்பன ஒரு பொருள் உணர்த்தும் தமிழ்ச் சொற்கள். இச்சொற்கட்குப் பால், நீர். சோறு, உணவு என்னும் பொருள்கள் உள. அமுதம் என்னும் தென் சொல்லினின்றே அமிர்தம் என்னும் வடசொல் தோன்

றிய தென்பர் பாவாணர். பாவாணரின் திருக்குறள் தமிழ் மரபுரையில் 'வானின் றுலகம்' எனத் தொடங்கும் குறளின் விளககத்தினைக் காண்க.

இதே பொருளில் மழையை அமுது என்று குறித்தும், 'அமிழ்து' 'அமிழ்து' என்று சொல்லுங்கால் 'தமிழ்' 'தமிழ்' எனத் தோன்றி இனிமையைப் பயக்கின்றது என்று பிறிதொரு டமையாது, பாடலில் கூறிய தோடமையாது. "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்றும் பாடினர் பாவேந்தர்.

மேற்குறித்த 64 ஆம் இயலில் 'செவிக்கமுது' என்று கூறி, இனிய தமிழ் போலும் இனிய செய்தியைக் கொணர்க" என்று அன்னம் கூறுவதாக அமைந்துள்ள விதம் நமது உளத்திற்கமு தாகிக் களிப்பூட்டுகின்றது. இதே பொருள்படப் பிறி தோரி டத்தில் அமுது என்னமல்,

"வேலன் காதில்
வாய்மலரை ஒற்றிமலர்த் தேனைப் பெய்தாள்"

என்று தேனைக் கூறி நமது இன்பத்தை மிகுவிக்கின்றார் பாவேந்தர்.

(10) இறுதியாக 94 ஆம் இயலில்,

"விரைவில் அன்னம்
பறக்குமுனம் பறந்தின்பம் பகிர்ந்தான் வாழி"

என நூலை முடிக்கின்றார். இங்கு,

'நுகர்ந்தான் வாழி' என்னது 'பகிர்ந்தான் வாழி' எனக் கூறியுள்ளமை மிகவும் இன்பம் பயப்பதாகும்.

இல்லற இன்பத்தைத் தான் மட்டும் நுகராது தன் துணை யுடன் பகிர்ந்து கொண்டான் என்று பெண்ணுரிமை முழக் கோடு தன் பாவியத்தை முடித்துள்ள திறம் இன்பம் பயப்ப தல்லவோ!

இவை மட்டும் அல்லாமல், பாவேந்தர் தம், 'பாண்டியன் பரிசி'லும் ஏனைய நூற்களிலும் பல கருவூலங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளார். அவற்றையெல்லாம் உலகுக் குணர்த்தி உவகை மிகுப்பது அறிஞர் கடனும்.

# மகளிர் விளையாட்டுக்கள்

பேராசிரியர். வ. பெருமாள், எம்.ஏ., பி.டி., எம் ஆர்., ஏ. எசு.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல்

தமிழிலக்கியம் வெறும் இலக்கியமாக மட்டும் அமையாமல் சிந்தனைக் களஞ்சியமாகவும் கருத்துக் கருவூலமாகவும் சிறந்து விளங்குகின்றது. மனித சிந்தனைக்குட்பட்ட எல்லாக் கருத்துக்களையும் தமிழ் இலக்கியத்தில் பரக்கக் காணலாம். மகளிர் விளையாட்டுக்களைப் பற்றித் தமிழ்ப் புலவர்கள் குறித்துள்ள ஒரு சில கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பந்து விளையாட்டு, பெண்களுக்கே உரிய சிறப்பு விளையாட்டாகப் பண்டைத் தமிழகத்தில் கருதப்பட்டது. பநதை மேலும், கீழும், அப்படியும், இப்படியும், முன்னும் பின்னும். இங்கும் அங்கும், அடித்து விளையாடுவது பண்டை மகளிர் மரபு. பந்தாடும்போது உட்கார்ந்து கொண்டோ நின்று கொண்டோ ஆடாமல் இங்கும் அங்கும் ஓடி ஆடுவது மகளிர் இயல்பு. மங்கையர் தம் விருப்பம் போல் 'கன்னு பின்னு' என்று பந்தடிக்காமல் முறை, வகை. ஒழுங்கு முதலியவற்றிற்கு உட்பட்டுச் செம்மையாக விளையாடினார்கள். கருத்திலுள்ள பொன் மாலை ஒளி வீசிக் கண்ணுக்கு விருந்தளிக்க, இடையில் அணிந்துள்ள மேகலை இன்னிசை வழங்கிச் செவிக்கு இன்பம் நல்க, பாண்டிய வேந்தனை நா வாழ்த்த. மகிழ்ச்சிப் பெருக்குடன் மங்கையர் பந்து ஆடும் கண்கொள்ளா இனிய காட்சியை இளங்கோ அடிகள் சொல்லோவியமாய் வடித்துக் காட்டுகின்றார்.

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன்வாழ்க வாழ்க வாழ்க என்று
சென்றுபந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்றுபந் தடித்துமே''

''பின்னும் முன்னும் எங்கணும்பெ யாந்துவஞ் தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே.''

"துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்றும் அந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே"

— சிலப்பதிகாரம் —

ஆட்டத்திற் கேற்றவாறு பெண்கள் பாங்குடன் பாட்டுப் பாடுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இக்காட்சியில் ஆட்டத்திற்கு ஏற்ற பாட்டையும், பாட்டுக்கு ஏற்ற ஆட்டத்தையுப காண்கின்றோம். பெண்கள் பந்தாடும்பொழுது தங்களுடைய பல்வேறு திறமைகள் தோன்றுமாறு ஆடினார்கள் பந்தெடுத்தல், மாலைக்குள் மறைத்தல், கையில் ஓட விடுதல், வேகமாக அடித்தல் ஆகிய நுட்பத்திறமைகள் நன்கு புலப்படுமாறு பந்தாடினார்கள். அவர்கள் பந்தாடியபோது அவர் தம் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கால் தாண்டவம் ஆடியது. சுருங்கக் கூறுமிடத்துப் பந்து விளையாட்டில் அவர்கள் பெற்ற இன்பத்திற்கு எல்லையே இல்லை.

"வைத்த பந்தெடுத்தலும் மாலையுட்க ரத்தலும்
கைத்த லத்தின் ஓட்டலும கண்ணி நெற்றிதீட்டலும்
பத்தி யிற்பு டைத்தலும் பையரவ்வின் ஆடலும்
இத்தி றத்த பந்தினோடின்பம் எல்லையில்லையே"

என்று திருத்தக்க தேவர் தாமியற்றிய சீவகசிந்தாமணியில் பாடுகின்றார். பந்து விளையாட்டு பண்டைக்கால மங்கையர்க்கு இன்ப விளையாட்டாக இருந்தது என்பது சொல்லாமலே விளங்கும்.

பெண்களுக்குரிய மற்றொரு சிறப்பு விளையாட்டு ஊஞ்சல். இது ஊசல் என்றும் குறிக்கப்படுகின்றது. பெண்கள் ஊஞ்சலில் அமர்ந்துகொண்டு தம் கால்களால் நிலத்தை அழுத்தமாக உந்தி முன்னும் பின்னும் விரைந்து ஆடுவதால் அவர்களுக்குப் பொதுவாக உடல் வலிமையும் குறிப்பாக இடைவலிமையும் ஏற்படுகின்றது. இடுப்பு வலிமையாகவும் உறுதியாகவும் இருந்தால் தான் மகப்பேறு காலத்தில் பெண்கள் வலி இல்லாமல் குழந்தைகள் பெற முடியும். இது மருத்துவ நிபுணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. எனவேதான் நம் முன்னோர்கள் ஊஞ்சல் ஆட்டத்தைப் பெண்களுக்கென்றே ஏற்படுத்தினர். மகளிர் இடை அளவால் சிறியதாக இருந்தாலும் வலிமையால் குறைந்து விடாது; குறையவும் கூடாது.

தேவார முதலியஐந்துறுப்பும் வாழ
சிறந்தமறை ஆகமங்கள் செழித்து வாழ
தாவாத சித்தாந்த சைவம் வாழ
சந்தவரைச் செந்தமிழ்நூல் தழைத்து வாழ
நாவாரும் புகழ்க்கச்சி நகரிற் காம
நயனியொடு முறையிறைசீர் நன்குபாடி
பூவாரு மலர்விழியீர் ஆடிர் ஊசல்
புத்தமுத நிகர்மொழியீர் ஆடீர் ஊசல்

என்று கச்சிக் கலம்பகம் இனிது பாடுகின்றது.

குளத்திலும் ஆற்றிலும் நீந்துவது சிறந்த உடற்பயிற்சியாகும். மார்கழித் திங்களில், அதிகாலையில், மகளிர் கூட்டம் கூட்டமாகக் குளத்திற்கும் ஆற்றுக்கும் சென்று நீராடுவது மரபு. அவர்கள் குளிப்பதுடன் அமைந்துவிடாமல் நீரில் நன்ருக ஆடுவாகள். நீரில் ஆடுவது நீராடல் எனப்படும். உடல்குளிர, மனம் மகிழ இறையுணர்வோடு மகளிர் நீராடும் காட்சியைத் திருவெம்பாவை இனிது பாடுகின்றது.

காதில் அணிந்துள்ள குழையாட, ஏனைய அணிகலன்கள் ஆட, கூந்தல் ஆட, இறைவன் புகழைப் பாடிக் கொண்டே குளிர்ந்த நீரில் நீராடு என்று அறிவுறுத்துகின்றது திருவெம்பாவை.

"காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்"

என்பது மாணிக்க வாசகரின் மணிமொழி பண்டைக்காலத் தமிழக மகளிர் நீரில் ஆடி அதன் வாயிலகாச் சிறந்த உடற் பயிற்சி பெற்றனர் என்பது தெளிவு உந்தி, பூவல்லிகொய்

தல், தெள்ளேணம், சாழல், தோள் நோக்கம் முதலிய மகளிர் விளையாட்டுக்களை மாணிக்கவாசகர் நயம்படப் பாடியுள்ளார்.

தச்சு விடுத்தலும் தாம்அடி இட்டலும்
அச்சி முறித்தது என்று — உந்தீபற
அழிந்தன முப்புரம் — உந்தீபற!

பண்பட்ட தில்லைப் பதிக்கு அரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்து அனல்
விண்பட்ட பூதப் படைவீர் பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ!

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத திருவடியை
உருநாமம் அறிய ஓர் அந்தணன் ஆய் ஆண்டு கொண்டான்
ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ!

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெய்யப் பலிதிரியும்
நம்பனையும் தேவன்என்று நண்ணும்அது என்னேடி
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாம்அறியா
எம்பெருமான் ஈசாஎன்று ஏத்தினகாண் சாழலோ!

மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானம் தொழும்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகிநின்று ஆடாமோ தோள் நோக்கம்!

இப்பாடல்கள் திருவாசகத்தில் மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. பாடிக்கொண்டே ஆடும் மகளிர் விளையாட்டுக்களில், கும்மி அடித்தலும் ஒன்றாகும். கும்மி அடித்தல் பொதுவாக மங்கையரிடத்திலும் சிறப்பாகச் சிறுமிகளிடத்திலும் இன்னும் காணப்படுகின்றது. பெண்கள் விடுதலைக் கும்மி என்னும் தலைப்பில் பாரதியார் பாடிய பாடல்கள் இங்குக் குறிப்பிடத் தக்கன.

இதோ சில பாடல்கள் :—

கும்மியடி! தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் பொயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி!

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார் அதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி!

* * * *

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!

கும்மிப் பாடலைப் பாங்குடன் பாடிய பாரதியார் பாப்பாவைப் பார்த்து "ஓய்ந்திருக்காமல் கூடி விளையாடு" என்று குழந்தை மொழியில் இனிது பாடுகின்ருர் :—

ஓடி விளையாடு பாப்பா — நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா — ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

இவற்றைத் தவிரக் குரவை, கோலாட்டம், அம்மானை, கழங்கு முதலிய பிற விளையாட்டுக்களும் மகளிர்க்கு உரியனவாகக் கருதப்பட்டன.

சுருங்கக் கூறுமிடத்து அக்கால மகளிர் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டுத் தம் உடலைப் பொலிவும் வலிவும் உள்ளதாக ஆக்கிக் கொண்டனர், அதன் பயனாக உள்ளத்தில் ஊக்கமும் உடலில் சுறு சுறுப்பும் பெற்றுத் திகழ்ந்தனர். இக் காலப் பெண்களும் அவர்களைப் பின்பற்றி நலம் அடைவார் களாக,

# இராமலிங்க அடிகளாரின் இசைப்பாடல்கள்

புலவர். தி. நா. அறிவு ஒளி

முன்னுரை: இயற்கையே இசை வடிவாக அமைந்தியங்குகிறது. இயக்கமும் இசை; இயங்காமையும் இசையே ஒலியென்னும் வியப்பு ஓவியயெழில் தாங்கும் போது 'இசை'யாக விளைகிறது இசையில் மயங்காத உயிரினமே இல்லை. உணர்வை இசையவைக்கும் கலையே இசை.

முத்தமிழில் நடுநிலை சான்று திகழ்வது இசைத் தமிழாகும். இயல் உடலாக இசை உயிராக விளங்கும் இசைத் தமிழ் கூத்துக்கு இயக்கும் ஆற்றலாக அமைகிறது

இயற்றமிழில் இசை உயிர்நாடியாக அமைந்துள்ளது. தமிழர் இசைக் கலையின் வடிவங்களே யென வாழ்ந்தனர். நாட்டுப் பாடல் நாடோடிக் கலைகளிலும் இசையின் பேராட்சி எவ்வளவு! இசையில் மலர்ந்த இன்பங்களே தமிழகக் கலைகள். நாடோடிப் பாக்கள் கல்லாமாந்தரின் கலைவடிவங்களாயினும், உணர்வின் கனிகளாக இலக்கிய நயம் என்னும் தொட்டிலில் தாலாட்டி வளர்க்கப் பெற்றவையேயாகும்.

"மாண்டு மடிந்தாலும் வைகுந்தம் சேர்ந்தாலும்
மாண்ட இடந்தனிலே மல்லிகைப்பூ பூப்பேன்
பஞ்சணை மெத்தையிலே படுக்கைமலர் ஆவேன் நான்
கொண்டைக்குப் பூவாவேன் கொய்சகத்தில் பையாவேன்
நெற்றிக்குப் பொட்டாவேன்; நீலவிழி மையாவேன்
முன்றானைத் தொங்கலிலே முள்ளாகி ஒட்டுவேன் நான்
காலுக்கு மெட்டாவேன்; கைவளையல் தானுவேன்"

என்ற மக்கள் பாடலில் காதலுணர்வு கனிந்து கனிந்து பொங்கிப் பேராற்றலோடு செங்கோல் செலுத்துவதை உணரலாம். †

---

† 'கிறித்தியானு இராசட்டி' என்ற பெண்பாற் புலவரின் நெஞ்சுருக்கும் பாடல்: "When I am dead, My Dearest" என்ற தலைப்புடையது. அழகிய இரக்க உணர்வும், உள்ளார்ந்த அடைவுகளின் தெளிவாக்க் கற்பனை நயங் கனிந்துள்ளது. இவ்வாங்கில பாடலோடு மேற் பாடலை ஒப்பிட்டுணர்க.

(122 ஆம் பக்கம் பார்க்க)

வால்டர் பேடர் இசையை நோக்கியே எல்லாக் கலைகளும் நடையிடுகின்றன என்ற கருத்தைக் கூறினர். * எவ்வளவு சீரிய கருத்து! எல்லாக் கலைகளிலும் இசைவு அமைந்துள்ளது. அகத்தை ஒருமையுறச் செய்வது இசையே,

காலம் சிரிக்கிறது! உள்ளம் கொஞ்சுகிறது! உணர்வுகள் வண்ண வண்ண மலர்களைப் பூத்துச் சிரிக்கின்றன. பூக்களிலிருந்து அழகு வானவில்கள் விரிகின்றன. வானவில்லின் வண்ணங்கள் குழைந்து விரிந்து சுழன்று கோலமிடுகின்றன. கோலத்தின் முடிவில் எழிற்கோவில் நிமிர்கிறது. நிமிரும் கோவிலில் ஓவியப் பாவை ஒளிர்கிருள்; பெண்ணழகு பாட்டாக, இசையாக விரிகிருள்; இசை நயத்தில் ஓவியம் பிறக்கிறது; ஓவியத் தோற்றத்தில் உண்மை ஒளி சுடர்கிறது; சுடரின் அசைவில் ஆண்மை விம்முகிறது; ஆணின் ஆற்றிலில் இயற்கை இளநீல வண்ணம் குழைகிறது. இன்பம் ஆட்சி புரிகிறது இசை மயக்கம் இல்லாதவன் புலவனுக இயலாது. இசையின் உயிர் நிலைபெற்ற நெஞ்சமே இலக்கிய ஆக்கங்களை ஈன்று புறந்தரும்.

இசை மரபு. துறவியரான இளங்கோ, திருத்தக்க தேவர், மணிமொழியார் தோலாமொழித் தேவர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், பிற அடியார்கள் முதலியோர் இசைத் தமிழ் அடிமை

( 121 ஆம் பக்கத் தொடர்ச்சி )

"When I am dead. my dearest.
sing no songs for me;
Plant thou no roses at my head.
Nor shady cypress tree;
Be the green grass above me
With showers and dew drops wet.
And if thou wilt, remember,
And if thou wilt, forget.
"I shall not see the shadows.
I shall not feel the rain;
I shall not hear the nightingale
Sing on as if in pain;
And dreaming through the twilight
That doth not rise nor set,
Haply I may remember.
And haply may forget"

* All art aspires towards the condition of Music —
Walter Pater.

களாக விளங்கினர். தமிழ் மரபு இசைக்கு நல்கிய மதிப்பு ஈடிணை யற்றது. இவற்றை நன்குணர்ந்த இராமலிங்கர் தாமும் இசைத் தமிழ் புரந்தார்.

மக்கள் வாழ்வியல் ஓட்டத்தை வடிக்கும் நாடோடிக் கலை வடிவங்களுக்கு, உயர்நிலை சான்ற இலக்கியத் தகுதிக்குப் புலவோர் உயர்த்தினர். மகளிர் விளையாட்டுப் பாடல்கள், தொழிலாளர் தொழிற் பாடல்கள், சிறுவர் பாடும் ஆடற் பாடல்கள் ஆகியவற்றையும் அவற்றிற்கு மன்பதையிலுள்ள உயிர்த் தன்மையையும் புலவோர் உணர்ந்தனர். அதன் விளைவாக இளங்கோவடிகள், 'வள்ளைப் பாட்டு', 'குன்றக் குரவை' கானல் வரி, ஆற்று வரி, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி, கந்துக வரி, அம்மானை முதலிய பாடல் வடிவங்களுக்கு இலக்கிய ஆற்றலை வழங்கினர். சித்தர்கள் (உயரிய இலக்கியத் தகுதியோடு அமையாதவை யெனினும்) நாடோடியாப்புகளை மெய்யறிவுச் செய்திகளை வெளியிடப் பயன்படுத்தினர். மணிமொழியார், குயில்பாட்டு, பொன்னூசல், சாழல், தோணோக்கம், பூவல்லி கொய்தல், திருப்பள்ளியெழுச்சி, எம்பாவை முதலிய வடிவங்களை இலக்கிய வாழ்வுக்குரியவையாக யாத்தளித்தார்.

**காலச் சூழ் நிலை.** இராமலிங்க அடிகளார் வாழ்ந்த காலச் சூழ்நிலையில் தமிழகத்தில் இசைக் கலைக்கு நல்ல செல்வாக்கிருந்தது. வடமொழி, தெலுங்கு, கன்னட, மராத்தி இசைப்பாக்கள் அரசியல், சமயத்துறை வல்லமையைப் பின்னணியாகக் கொண்டு நாட்டில் பரவியிருந்தன. தியாகராயர் சியாமா சாத்திரி, முதலிய பிறமொழிவாணர் தமிழகத்தில் வாழ்ந்த அவ்வம் மொழியில் இசைப்பா உருப்படிகளை யாத்தளித்தனர். அவை இசைவாணரால் மேடையெங்கும் பாடப்பெற்று வாழ்ந்து கொண்டிருந்தன தஞ்சை, செஞ்சி, மதுரை, ஆர்க்காடு, புதுவை ஆகிய இடங்களில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதார் ஆட்சி ஓரிரு நூற்றுண்டுகளாக நிலவியிருந்தமையால், தமிழிசை மங்கவும் பிறமொழியிசை செழிக்கவுமான நிலையமைந்திருந்தது. ஏறத்தாழ 270 ஆண்டுகளுக்கு முன் தஞ்சை வட்டம் பாவநாசம் அருகில் ஊத்துக் காடு என்னும் ஊரில் வாழ்ந்த வேங்கட சுப்பையர், எட்டையபுரம் அரசவைப் புலவர் கடிகை முத்துப் புலவர் மரபில் தோன்றிய வல்லீபரதம் என்ற இசைப்பா நாடக ஆசிரியர் கடிகை நமச்சிவாயப் புலவர், பழநி மாம்பழக் கவிச் சிங்க நாவலர், நந்தனர் இசை நாடகம் யாத்த கோபால கிருட்டிண பாரதியார், சீர்காழி அருணாசலக் கவிராயர் (இராம நாடக

இசைப்பா இயற்றியவர்) மாயவரம் வேதநாயகர், எனப் பலர் இசைப் பாடல்கள் இயற்றிக் குவித்த சூழ் நிலை அந்தக்காலம். இசைத் துறை நாட்டமின்றி இயற்றமிழ்த் துறையிலே ஆர்வ மிக்க பெரும் புலவர். திருசிரபுரம் மீனுட்சிசுந்தரனர் கூட சில உருப்படிகள் பாடினர் எனில், அக்கால இசைப் பாடல் ஆர்வம் தெளிவாகும். இந்தச் சூழ் நிலையில் மலர்ந்த வடலூர் அடிகளார் இசைத் துறையில் படைப்புகள் அளித்தருளியமை இயல்பாயமையக் கூடியதேயாம்.

தமிழில், பரிபாடல், கலிப்பா, வெண்பா. தாழிசை, வெண் டுறை. செந்துறை, வஞ்சிபபா, பெருந்தேவபாணி, வரிப்பாடல் கள், மண்டிலங்கள், பாவினங்களுட் சில. தாண்டகங்கள், கண்ணிப்பாக்கள், சிந்து வகைகள். முதலியவை இசையாப்பு களாக அமைந்து விளங்கின.

தரவு — தாழிசை — சுரிதகம் முதலிய கலியுறுப்புகளை அடி யொற்றி முகநிலை — இடைநிலை — முரிநிலை வடிவில் பாக்கள் இயற்றப்பெற்றன. இவை சற்றேதிரிபுற்றுக் கீர்த்தனை—கிருதி முதலிய வடிவங்களில் பிறமொழிகளில் வளர்ந்தன.

"பாட்டு உயிர்; பொருள் உள்ளம்; கருத்து மெல்லிய கரணம்; விருத்தி உடல்" எனத் திரு. வி க அவர்கள் தமது திருக்குறள் — பாயிரம் — முன்னுரையில் எழுதியுள்ளார்.

"பாட்டுக்கு உயிருண்டு என்பது நகைக் குரியதாகத் தோன்றக் கூடுமேனும், பாட்டுக் குயிருண்டென்பது மெய்யே. நம்முயிரை ஈர்க்கும் ஆற்றல் பாட்டின் கண் உள்ளதென்பதை யாரே உணரார்?

"பாட்டு ஒன்றுமே உயிர்கட்கு அறிவை விளக்கி அதற்கும் மேற்பட்ட உணர்வை எழச் செய்து இன்பம் பயப்பதொன்ருய் நிலைபெறுகின்றது" எனப் பேரறிஞர். மறைமலையடிகளார் தமது பட்டினப் பாலை ஆராய்ச்சியுரையில் 'பாட்டினியல்பு' என்னுந் தலைப்பில் விளக்கியுள்ளார்,

இசைப்பாட்டில் தக்க இடத்தில் நயமுள்ள தக்க சொற்கள் இசையழகு கனியப் பொருந்த வேண்டும். அப்போதே தாளந் தழுவிய தண்ணிசை பாவில் கோவில் கொள்ளும்.

**யாப்பும் இசையும்.** கலிப்பாவிற்குத் துள்ளலோசையும், வெண்பாவிற்குச் செப்பலோசையும், வஞ்சிப்பாவுக்குத் தூங்கலோசையும், ஆசிரியப்பாவுக்கு அகவல் ஓசையும் உரித்து என்ற சான்றோர் இவ்விப் பண்ணில் இன்னின்ன யாப்பினை இசைக்க வேண்டும் எனவும் வரையறுத்துள்ளமை கருதத்தக்கதாகும்.

'யாப்பு' இசைவாழும் கோவிலேயாம். பிற்காலச் சிந்து யாப்பின்கண் இசை ஓவியமே ஒளியோடு திருக்கூத்திடக் காணலாம். இச் சிந்து வடிவமும் ஒரு வகையில் கலிப்பாவின் பேரப் பிள்ளையே. இதன் தந்தை தாயாக திருப்புகழ் பாவடிவமும், கலித்தாழிசை வடிவமும அமைந்தனவெனலாம். சந்த மண்டிலங்களாகத் தமிழில் பூத்துக் குலுங்கும் அருணகிரியாரின் திருப்புகழும், சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும், கம்பனின் இசையமுதான பாக்களும், சூளாமணி, சிந்தாமணி, வீரகவிஞரும் அரிச்சந்திரன் பாவியமும் திருத்தொண்டர் மாக்கதையும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடலும் இசைப்பா யாப்புகட்கு பாலுங், குருதியுமாகப் பயன்பட்டுள்ளன. சிந்துப்பாக்களும் இப்பாலுங் குருதியும் கொண்டு வளர்ந்தவை யென்றுணர்தல் வேண்டும்.

சித்தில், 'வியனிலைச் சிந்து', 'சூனிலைச் சிந்து' என இரு வகை யமைகிறது

1. வியனிலைச் சிந்து தனிச் சொல்லின் முன்னடி குறளடியும் பின்னது சிந்தடி அல்லது அளவடியும் கொண்டிருக்கும்.

2. சமனிலைச் சிந்து, தனிச் சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள அரையடிகள் அளவொத்திருக்கும்.

சிந்துயாப்பில் சந்தக் குழிப்புக்கும், தாளவமைப்புக்கும் ஏற்ப சிற்சில மாறுதலகளும் பெற்றமைவதும் உண்டு.

சிந்துயாப்பில் கீழ்ச்கண்ட பல்வகைப் பாக்கள் அமைகின்றன: 1. காவடிச்சிந்து, 2. நொண்டிச்சிந்து. 3. வழிநடைச் சிந்து 4. வளையல சிந்து 5 குள்ளத்தாராச்சிந்து 6, தங்கச் சிந்து, 7. ஏற்றப்பாட்டு, 8. ஏசற் பாட்டு. 9. தாலாட்டு. 10. கிளிக்கண்ணி, 11. ஏலப்பாட்டு, 12. இலாவணி 13. சேவற் பாட்டு, 14. தெம்பாங்கு. 15. குறவஞ்சி. 16. ஆனந்தக் களிப்பு, 17. புலம்பல், 18. கப்படற் பாட்டு, 19. கோலாட்டப் பாட்டு, 20. கும்மிப் பாட்டு, 21. ஊசற் பாட்டு. 22. ஒப்பாரிப் பாட்டு, 23. பண்டாரப் பாட்டு ...... எனப் பலவகையாகச் சிந்து வடிவங்கள் வழங்கி வருகின்றன.

**கும்மி.** கும்மியில் வெண்டளை பிறழாத ஏழுசீர்கள் அமைந்த ஈரடியாக வரும். இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்ட

ளையும் மட்டுமே கும்மியில் அமையும். ஒவ்வோரடியின் ஈற்றுச் சீரும் விளங்காய்ச் சீராக இருக்கும். இதனை இயற் கும்மி என்பர்.

ஓரடியில் பொருள் முற்றுப் பெறுவது ஓரடிக் கும்மியாகும்.

வெண்டளை பெற்ற ஏழுசீர் கழிநெடிலடி ஒன்றும். அதன் பின்னே முடுகி நடக்கும் நான்கு சீர்களும், அதன்பின் வெண் டளை பிறழாத மூன்று சீர்களும் அமைய யாப்பது ஒயிற்கும்மியாகும்.

"தென்பரங் குன்றினில் மேவுங் குருபர
தேசிகன் மேற்கும்மிப் பாட்டுரைக்க
சிகரத்திரு மகரக் குழை
திகழுற்றிடு முமை பெற்றிடு
தில்லைவி நாயகன் காப்பாமே!"

என்பது போல வரும்.

தமிழிசையில் சந்த மண்டிலங்கள் (விருத்தங்கள்) என்பவை சந்தக் குழிப்புகளுக்கும், தாளக்கட்டுக்கும், யாப்பமைதிக்கும் உட்பட்டமைபவை. திருப்புகழ் முதலியவை இத்துறையில் சீரியவை.

வகுப்பு. (மயில் வகுப்பு. வேல் வகுப்பு போன்றவை) வண் ணம் ஆகிய யாப்புகளும் சந்தக் குழிப்புகளால் அமைபவையா கும். (தன, தனன, தான, தனு, தந்த, தத்த, தனத, தானத, தைய, தக்க, தகதிம், ததிங்கிணதோம்... போல்பவை குழிப்பு களாகும்.)

— தொடரும் —

## கையறவு

திரு ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் 6—7—72-இல் இறைவன் திருவடி நீழலை யடைந்தார்கள். இவர்கள் கல்வித் துறையில் பணியாற்றி முடிவில் துணை இயக்குநராக ஓய்வு பெற்றார்கள். பின்னர் சில ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பதிவாளராகப் பணியாற்றினார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்க அன்பர்களில் ஒருவராக இருந்து வந்தார்கள். தமிழவேள் த வே உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் நெருங்கிய நண்பர்களில் ஒருவராக இருந்து வந்தார்கள். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 1927-இல் நடந்த கசு ஆம் ஆண்டு விழாவின் போது திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் ஆற்றிய 'தமிழர் சமய வாழ்க்கை' என்னும் ஓர் அரிய சொற் பொழிவினை இன்றும் சங்க அன்பர்கள் சிலரால் நினைவு கூறப் பெற்றும் பாராட்டப்பெற்றும் வருகிறது. நற்பண்புகளெல்லாம் ஒருங்கேயுடையவராக வாழ்வாங்கு வாழ்ந்தவர். சிறந்த சைவத் தொண்டாற்றிய சைவப் பெரியாரும் ஆவர். அவர்களின் இன்னுயிர் இறையடி நீழலில் பேரின்பம் எய்துமாக.

# மணி விழா

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மணிவிழாவினை சூலைத்திங்களில் கொண்டாட எண்ணியிருந்தோம் ஆனல், விழாவில் பங்கேற்கவிருக்கும் அமைச்சர்கள் தமிழ்ப் பேரறிஞர்கள் முதலானோர்கள் வர இயலுங் காலத்தை யொட்டியும் மற்ற ஏற்பாடுகளைத் திறம்படச் செய்யவும் எண்ணி செப்டம்பர் திங்களில் விழாவினை நடத்த முடிவு செய்துள்ளோம். விழா நடத்தப் பெறும் நாட்கள், நிகழ்ச்சி நிரல் முதலான விவரங்கள் பின்னர் வெளியிடப்பெறும்.

**புத்தகக் கண்காட்சி :**

மணிவிழாவின் போது புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறோம். பல்கலைக் கழகங்களும், சில நூல் வெளியீட்டங்களும் கண்காட்சியில் பங்கேற்றுச் சிறப்பிக்க இசைந்துள்ளார்கள். கண்காட்சி 5 அல்லது 6 நாட்கள் நடத்தப் பெறும். கண்காட்சியில் புத்தங்களை வைத்திருப்பதற்கு வேண்டிய வசதி இலவசமாகச் செய்து தரப்பெறும். தமிழ் மொழியில் வெளி வந்துள்ள சிறந்த நூல்களைப் பொது மக்கள் பார்த்துப் பயனுற வேண்டுமென்பது குறிக்கோள். இதைக் சிறப்புறச் செய்யத் தமிழ் நாட்டிலுள்ள் எல்லா நூல் வெளியீட்டகங்களும் ஆசிரியர்களும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

**கட்டுரைக் கோவையும் சிறப்பு மலரும்**

மணிவிழாவின் போது தமிழ்ப் பேரறிஞர்கள் பலரால் எழுதப்பெற்ற கட்டுரைக் கோவையொன்று வெளியிடபெறும். மற்றும் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப் ஏற்பாடுகள் செய்யப்

பெற்றுள்ளன. சிறப்பு மலரை 5000 படிகள் அச்சிட்டு வழங்க எண்ணியுள்ளோம். நிதியகங்கள், சங்கங்கள், வணிக நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவற்றின் பொறுப்பாளர்களும் வணிகப் பெருமக்களும் அருள் கூர்ந்து விளம்பரங்கள் தந்து உதவியும் தங்களாலான நன்கொடைகள் அளித்தும் ஆதரவு தர வேண்டுகிறோம்.

இத்தகு பேருதவிகள் தமிழ்ச் சங்கப் பணிகளுக்கு ஊக்கமும் ஆக்கமுமாக அமையும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறோம்.

பொழிற்றொண்டர்

---

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கும் நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப் பிரிவு 15-B யின் படி வருமான வரி விதிப்பிலிருந்து விலக்குண்டு. பொதுவாக விளம்பரங்களுக்கும் சில வரையறைகளுக்குட்பட்டு வருமானவரி விதிப்பிற்கு விலக்குள்ளது.

நன்கொடைகளும் விளம்பரக் கட்டணமும் அனுப்புவோர் பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம் கருநதிட்டைக்குடி தஞ்சாவூர் - 2. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

---

## விளம்பரக் கட்டணம்

| | உருபா |
|---|---|
| சிறப்பு மலர் கடைசி அட்டை இரு வண்ணங்களில்-முழுப் பக்கம் | 750 |
| உள் பக்க அட்டை | 400 |
| உள்ளே முழுப்பக்கம். | 250 |
| ,, அரைப் பக்கம் | 150 |